*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*21 08 2026 FRIDAY 7 15 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

***<u>தலைப்புச் செய்திகள்</u>***

***1.*** *எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.*

***2.*** *மொபைல் ஃபோன் உற்பத்தி திட்டத்தை மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.*

***3.*** *வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதில், கடல்சார் துறை முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

***4.*** *எரிசக்தி ஒத்துழைப்பை வலுப்படுத்துவதென இந்தியாவும், மொரீசியஸும் முடிவு செய்துள்ளன.*

***5.*** *உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Treesa Jolly - Gayatri Gopichand இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*>>>>>><<<<<<*

*எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.*

*மேற்குவங்க மாநிலம், Siliguri-யில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மத்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு, செல்வி மம்தா பானர்ஜி தலைமையிலான முந்தைய அரசு ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்று குற்றம் சாட்டினார்.*

*தற்போது பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் இப்பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.*

*புதிய குற்றவியல் சட்டங்களை செயல்படுத்துவதற்கும், முந்தைய அரசு முட்டுக்கட்டையாக இருந்ததாக அவர் குறை கூறினார்.*

*பிஜேபி அரசு பொறுப்பேற்ற பின்னர் சட்டத்தின் ஆட்சி நிலைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*ஊடுருவல்காரர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு, அவர்களின் நாட்டிற்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் திரு. அமித் ஷா கூறினார்.*

*>>>>>><<<<<<*

*இந்தியாவில் முதலீடு செய்வதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், சிங்கப்பூரில் உள்ள துணை நிறுவனங்களின் தலைமை நிர்வாகிகளோடு ஆலோசனை நடத்திய போது இதனை தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார்.*

*நாட்டின் பொருளாதார அடித்தளம் வலுவாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றும் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*மொபைல் ஃபோன் உற்பத்தி திட்டத்தை மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இன்று தொடங்கி வைத்தார்.*

*எமது செய்தியாளரிடம் பேசிய அவர், 62 ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக தெரிவித்தார்.*

*மொபைல்ஃபோன் உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில், இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் இந்த திட்டம் உதவிடும் என்று திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

>>>>>><<<<<<

அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளில் இந்தியா சிறந்த விளங்குவதாக அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற பிரிக்ஸ் அமைப்பின் அறிவியல் தொழில்நுட்பம் புதுமை கண்டுபிடிப்புகளுக்கான அமைச்சர்கள் கூட்டத்தை அவர் தொடங்கி வைத்துப் பேசினார்.

இந்த துறைகளில் பிரிக்ஸ் நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதில், கடர்சார் துறை முக்கியப் பங்கு வகிப்பதாக கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

ஒடிசாவில் உள்ள Paradeep துறைமுகத்தில் 427 கோடி ரூபாய் மதிப்பிலான ஏழு கட்டமைப்பு திட்டங்களை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

கடல்சார் பொருளாதாரத்தில் இந்தியா விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மொரீசியஸ் உடனான எரிசக்தி துறை ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் புரி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், தூய்மை எரிசக்தி பயன்பாட்டிற்கு ஊக்கமளிக்கும் வகையில் இந்த ஒத்துழைப்பு மேம்படுத்தப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச உயிரி எரிபொருள் கூட்டமைப்பில் உறுப்பினராக மொரீசியஸ் இருப்பதையும் அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெட்ரோலியப் பொருட்களை சுத்திகரிக்கும் திறனை இந்தியா அதிகரித்துள்ளதாகவும் திரு. ஹர்தீப்சிங் புரி கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

சர்க்கரை விலை உயர்வை கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த மாதம் 20ஆம் தேதி 48 ரூபாய் 18 காசாக இருந்த சர்க்கரை விலை, நேற்று 55 ரூபாய் 70 காசாக அதிகரித்துள்ளதை அதனை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

எத்தனால் உற்பத்திக்கும் சர்க்கரை விலை உயர்வுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று அதில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

சர்க்கரை விலையை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் அந்த செய்திக்குறிப்பில் பட்டியலிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

இந்தியர்கள் 22 பேர் பயணம் செய்த வணிக கப்பலை, சோமாலியா மற்றும் ஏமன் கடல் பகுதியில், கடற்கொள்ளையர்கள் கடத்திச் சென்றுள்ளனர்.

இருப்பினும், இந்தியர்கள் பாதுகாப்புடன் இருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

அவர்களை மீட்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

>>>>>><<<<<<

*மணிப்பூரில் Imphal - Dimapur - Guwahati வழித்தடத்தில் போக்குவரத்து 3 ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று தொடங்கியது.*

*அம்மாநிலத்தில் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றபோது, இந்த வழித்தடத்தில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.*

*தற்போது இந்த வழித்தடத்தில் பேருந்து சேவை தொடங்கப்பட்டது, இயல்பு வாழ்க்கை திரும்புவதற்கான முக்கிய நடவடிக்கையில் ஒன்றாக கருதப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>>>>>><<<<<<*

*திரிபுராவின் கல்வித்துறையின் வளர்ச்சிக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் டாக்டர் மாணிக் சாஹா தெரிவித்துள்ளார்.*

*அகர்தலாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலம் முழுவதும் கல்வி கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.*

*அதிநவீன தொழில்நுட்ப பயன்பாடுகளை கொண்டு கல்வி கற்பிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.*

*இது மாணவர்களுக்கு பெரிதும் பயனளிக்கும் என்றும் திரு. டாக்டர் மாணிக் சாஹா கூறினார்.*

*>>>>>><<<<<<*

*தேசிய பாதுகாப்பில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதே தமது அரசின் நிலைப்பாடு என்று மேற்குவங்க முதலமைச்சர் திரு. சுவேந்து அதிகாரி கூறியுள்ளார்.*

*இன்று சிலிகுரியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்பட்டால் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்த முடியும் என்று தெரிவித்தார்.*

*>>>>>><<<<<<*

*மத்தியப்பிரதேசத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்யாத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் தலைமைச் செயலருக்கு அறிவுறுத்தியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், சட்டம் ஒழுங்கு பணியில் தொய்வு ஏற்பட்டாலோ, கவனக்குறைவாக செயல்பட்டாலோ நடவடிக்கை நிச்சயம் என்று எச்சரித்துள்ளார்.*

*இதனை கருத்தில் கொண்டு அதிகாரிகள் செயல்பட வேண்டும் என்று திரு. மோகன் யாதவ் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*தமிழகத்தில், சீமைக்கருவேல மரங்களை அகற்றுவது தொடர்பாக களஆய்வு நடத்தப்படும் என அரசு கூறுவது, தாமதப்படுத்தும் தந்திரம் என்று சென்னை உயர்நீதிமன்றம் தமிழக அரசுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.*

*இதுதொடர்பான வழக்கு, நீதிபதிகள் திரு. சதிஷ்குமார், திரு. ராஜசேகர் அமர்வு முன் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்த போது, அரசு சார்பில் அறிக்கை ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.*

*சீமைக்கருவேல மரங்களை அகற்றுவது குறித்து களஆய்வு நடத்தி, மாவட்ட ஆட்சியர்கள் அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் நிதி ஒதுக்கப்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.*

*இந்த அறிக்கை குறித்து அதிருப்தி தெரிவித்த நீதிபதிகள், சீமைக்கருவேல மரங்களை அகற்றுவதற்கு 5 கோடி ரூபாயை உடனடியாக ஒதுக்க வேண்டும் என்று அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் உத்தரவிட்டனர். இதனை செயல்படுத்தவில்லை என்றால், நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்த நீதிபதிகள், இவ்வழக்கின் விசாரணையை அடுத்த மாதம் 18ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தனர்.*

*>>>>>><<<<<<*

***சென்னையில் குடிநீர் விநியோகம் மற்றும் துப்புரவு பணிகளை, ஆசிய மேம்பாட்டு வங்கியின் கடனுதவியுடன் நவீனமயமாக்கும் திட்டத்திற்காக ஒப்பந்தம் இன்று புதுதில்லியில் கையெழுத்தானது.***

***ஆசிய வளர்ச்சி வங்கியும், மத்திய அரசும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.***

***இந்த திட்டத்தின் கீழ் 120 கிலோமீட்டர் தொலைவிற்கு குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகளுக்கான குழாய்கள் அமைக்கப்படவுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.***

***7 நீரேற்றும் நிலையங்களும், 38 கழிவு நீரேற்றும் நிலையங்களும் மேம்படுத்தப்படவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.***

*>>>>>><<<<<<*

***உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Treesa Jolly - Gayatri Gopichand இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.***

***புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 16-21, 21-15, 21-13 என்ற செட்கணக்கில் சீனாவின் Zhang Shu Xian - Jia Yi Fan இணையை வென்றது.***

*>>>>>><<<<<<*

***உலக கோப்பை ஹாக்கி போட்டியின் மகளிர் பிரிவில், இந்தியா - நெதர்லாந்து இடையேயான ஆட்டம், நெதர்லாந்தின் Amstelveen-ல் இன்று நடைபெறுகிறது.***

*>>>>>><<<<<<*

***சிங்கப்பூர் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Patri அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.***

***மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 19-21, 21-15, 21-19 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Asuka Takahashi-யை வென்றார்.***

***மற்றொரு மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் Llishaa Pal, 21-15, 21-19 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Momoka Kimura-வை வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.***

***ஆடவர் ஒற்றையர் பிரிவில் சங்கர் முத்துசாமி சுப்பிரமணியனும் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.***

*>>>>>>END<<<<<<*